# புத்தசிராவக பிக்கு பல்கலைக்கழகம் - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய புத்தசிராவக பிக்கு பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கைகயின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தசிராவக பிக்கு பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(i) முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்த ரூபா 14,248,641 கிரயமுள்ள 12 சொத்து விடயங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் பிரகாரம் மீள்மதிப்பிடப்பட்டு அப்பெறுமதியினை கணக்குகளிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உத்தியோகத்தர் ஒருவரின் சேவைக்காலம் 05 வருடமாகும் போது அவருக்கு பணிக்கொடை செலுத்துவதற்குரிய நிதிக்காக ஏற்பாட்டினைச் செய்வது நிறுவனத்தினால் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்ற கணக்கீட்டுக் கொள்கையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின்போது 01 முதல் 04 வருடங்கள் வரையான சேவைக்காலத்தினையுடைய நிரந்தர உத்தியோகத்தர்களுக்காகவும் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அக்கொள்கை மாற்றங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கணக்குகளில் விடுபாடுகள்**

---------------------------------------------

(i) மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 150,230 பெறுமதியான பொருட்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் வருவாய்ச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 142,428 பெறுமதியான வழிக் காசுக் காப்புறுதிக் கட்டணம், வாகன வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வகனங்களுக்கான காப்புறுதிக் கட்டணங்களுக்காக எதிர்வரும் வருடத்திற்காக செலுத்தப்பட்டவைகள் முற்கொடுப்பனவாகக் கருதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 98,029 தொகையான நீர்ப்பட்டியல் கட்டணம் மீளாய்வாணடிற்கான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய ரூபா 83,881 தொகையான நீர்ப்பட்டியல் பெறுமதி மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் காட்டல்**

--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்த ரூபா 332,174 தொகையான 03 சொத்துக்கள் தொடர்பாக ரூபா 63,901 தொகையான வருடாந்த பெறுமானத்தேய்வு பட்டோலைகளில் கழித்துக் காட்டப்பட்டிருந்தமையினால் வருடாந்த பெறுமானத்தேய்வின் அளவு அப்பெறுமதியினால் குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 138,751 பெறுமதியான பொருத்திகளை வருவாய்ச் செலவினமாகக் கருதி கட்டிடங்கள் திருத்தக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அக்காரணத்தினால் கட்டிடக் கணக்கு அப்பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) காணியும் கட்டிடமும் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 3,533,951 பெறுமதியான செலவினமானது வருவாய்ச் செலவினமாகக் கருதப்பட்டு காணி மற்றும் கட்டிட சிறு திருத்தங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கு மீதிகள் அவற்றிற்குரிய துணைப்பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | துணைப் பதிவேடுகள் /பட்டோலைகளின் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 8,358,403 | 8,782,534 | 424,131 |
| மின்சார செலவினம் | 1,117,721 | 1,225,709 | 107,988 |

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிசெய்ய செய்ய முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | | பட்டோலைகளின் பிரகாரம் தேறிய பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | ரூபா | |
| (i) | கட்டிடம் | 164,669,216 | (i) மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள்<br>(ii) நாளதுவரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(iii) விபரமான பட்டோலைகள் |
| (ii) | காரியாலய உபகரணம் | 2,079,571 | விபரமான பட்டோலைகள் |
| (iii) | கற்பித்தல் உபகரணம் | 884,474 | |
| (iv) | இயந்திரமும் பொறியும் | 22,908 | |
| (v) | கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 514,168 | |
| (vi) | தளபாடமும் உபனரணங்களும் | 7,840,920 | |
| (vii) | கணனி கடினப் பொருட்கள் | 4,369,022 | (i) விபரமான பட்டோலை<br>(ii) கணனி நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (viii) | கணனி மென்பொருட்கள் | 39,470 | |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 10,901,750 ஆன பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10,170,832 ஆகக்காணப்பட்டது.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவுக்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 61,649,373 தொகையிலிருந்து செலவுகளை மேற்கொண்டதன் பின்னர் ரூபா 1,369,405 தொகை பற்றாக்குறையாக இருந்தது. இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 60,860,754 தொகைக்குப் பின்னர் பற்றாக்குறை ரூபா 3,641,328 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு ரூபா 11,117,769 தொகையும் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு ரூபா 899,580 தொகையுமாக ரூபா 12,017,349 கூட்டுமொத்தத் தொகை மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை குறைவடைந்தமைக்கான காரணியாக இருந்தது. இதற்கு நேரொத்த முன்னைய ஆணடிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு ரூபா 6,568,499 தொகையும் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடு ரூபா 1,573,500 தொகையும் ஆக ரூபா 8,141,999 கூட்டுத்தொகையினைப் பதிவழித்தமை முன்னைய ஆண்டின் பற்றாக்குறைக்கான காரணமாக இருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(i) 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது கலைப்பரிட்சைக்காக பதிவு செய்த 110 மாணவர்களில் 106 மாணவர்களே பரீட்சைகளுக்கு சமுகமளித்திருந்ததுடன் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 81 ஆக இருந்தது.

(ii) கலைப்பிரிவு (பொது) பட்டம் I மற்றும் II, கலைப்பிரிவு (விசேட) I, II மற்றும் III, தொடர்பாடல் சான்றிதழ், கணனி விஞ்ஞான சான்றிதழ் மற்றும் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் போன்ற கற்கை நெறிகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற பரீட்சைக்களுக்காக சமுகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை 314 ஆக இருந்ததுடன், 2011 மார்ச் 16 இல் கணக்காய்வு முடிவடைந்த திகதியிலும் பெறுபேறுகள் வழங்கப்படவில்லை. இதற்கிணங்க பரீட்சை பெறுபேறுகளை வழங்குவதில் நீண்ட தாமதத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் விரிவுரை நடாத்துதல்

---

மீளாய்வாண்டின் போது புத்தசிராவக பிக்கு பல்கலைக்கழகத்தினால் திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 8040 ஆக இருந்ததுடன் நடைபெற்ற விரிவுரை மணித்தியாலங்கள் 6296 ஆக இருந்ததனால் திட்டமிடப்பட்ட மணித்தியாலங்களில் 22% ஆன 1744 விரிவுரை மணித்தியாலங்களிற்கு விரிவுரைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. வண.மகோபாத்யாய அவர்களின் பதிலின் பிரகாரம் சங்கைக்குரிய பிக்கு மாணவர்கள் தமது விருப்பத்தின் பேரில் வெளிச்செயற்பாடுகளில் ஈடுபட்டமை மற்றும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்காமை போன்றவை காரணங்களாகக் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.2 மனித வள முகாமைத்துவம்

---

மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியினரில் 03 பேராசிரியர் பதவிகள், 05 விரிவுரையாளர் பதவிகள் மற்றும் 01 நூலகருமாக 09 பதவிகளும், கல்விசாரா பதவியினரில் பிரத்தியேக செயலாளர், எழுதுவினைஞர், சாரதி, தொழிலாளர் என்பவற்றில் 01 பதவிப்படி 04 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. கல்விசாரா பதவியினரில் சிறாப்பர் பதவி கடமை ஒப்படைப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 68,000 பெறுமதியான கெஸ்டெனர் போட்டோ பிரதிபண்ணும் 01 இயந்திரம் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பாவனைக்கு எடுத்துக்கொள்ளாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 1.101,065 கிரயமுள்ள நானாவித சொத்துக்களின் இருப்பு பழுதடைந்த நிலையில் கிளையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அச் சொத்துக்களை ஏலத்தில் விற்பனை செய்து கணக்குகளிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பல்கலைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) கடன்பட்டோர்

(ஈ) பதிவேடுகளைப் பேணல்

(உ) பதவி வெற்றிடங்கள்